# தலைநிமிர வைத்த தலைச்சேரி ஆடுகள் ..!



சின்ன விஷயமாக இருந்தாலும், அதில் பூரண கவனம் செலுத்தினால்.. அந்த விஷயம் பிரமாண்டமானதாக மாறி விடும்.ரஷ்ய அறிஞர் லியோ டால்ஸ்டாயின் வரிகள் இவை.

இந்த வரிகளை தனது ஆட்டுப் பண்ணையின் மூலம் மெய்ப்பித்திருக்கிறார், நாமக்கல் மாவட்டம். பொன்நகர் கொந்தளம் கிராமத்தைச் சேர்ந்த மணி.

“வேலைக்கு ஆள் இல்லை, விளைஞ்சதுக்கு சரியான விலையும் இல்லை.. இப்படி பல இல்லைகளைச் சொல்லி புலம்பிக்கிட்டு இருப்பதை விட, விவசாயத்தைவிட்டே ஒதுங்குவதுதான் உத்தமம்னு நினைத்துக்கிட்டு, அந்த முடிவை செயல்படுத்தறதுக்கான வேலைகளில் இறங்கினேன். ஆனால், திடீர் திருப்பமாக ஆடு வளர்ப்பில் கவனம் போக.. இப்போ அதில் வெற்றிக் கொடி பறக்கிறது” என்ற சந்தோஷம் பொங்கச் சொல்லும் மணி, பரமத்தியிலிருந்து ஒன்பதாவது கிலோ மீட்டரில் இருக்கும் பொன்நகர் கொந்தளத்தில் தன்னுடைய ஆட்டுப் பண்ணைணை பிரமாண்டமான பண்ணையாக உருவாக்கி வைத்திருக்கிறார்.

நீள நீளமானக் கொட்டில்கள், தீவனப்புல் நறுக்கும் இயந்திரத்தை இயக்கிக் கொண்டிருக்கும் பணியாளர்கள் கலவைத் தீவனம் தயாரிக்கும் இயந்திரத்தில் வேலை செய்யும் பணியாளர்கள்.. என ஏதோ ஒரு பெரிய தொழிற்சாலைக்குள் நுழைந்த உணர்வை ஏற்படுத்துகிறது பண்ணை.

கால்நடை டாக்டராக இருக்கும் எங்க சொந்தக்காரர் துரைசாமி , கொட்டில் முறை ஆடு வளர்ப்பை முயற்சி பண்ணச் சொல்லி ஊக்கம் கொடுத்தார். 2005 ம் வருடம் கேராளாவில் இருந்து 50 தலைச்சேரி குட்டிகளை வாங்கிட்டு வந்து ஆட்டுப் பண்ணைணை ஆரம்பித்தேன்.

டாக்டர்கள் சொல்லிக் கொடுத்த விஷயங்களில் இருந்து கொஞ்சம்கூட மாறாமல், கண்ணும் கருத்துமாக வளர்த்ததில் இன்றைக்கு வகை வகையாக 600 ஆடுகளுக்கும் மேல் பட்டியில் நிற்கிறது. எனக்கும், என் மனைவி ருக்மணிக்கும் இந்தப் பண்ணைதான் உலகமே.

ஆரம்பத்தில் செலவைப் பற்றி கவலைப்படவேயில்லை. எப்படியும் சம்பாதிச்சுடலாம் என்று ஒரு வெறி. அதே அளவுக்கு நம்பிக்கையும் இருந்தது. பேங்கில் கேட்டுப் பார்த்து, பெரியளவில் கடன் கிடைக்கவில்லை. கையில் இருந்த சேமிப்பு, நகை நட்டை அடகு வைத்து, சொந்தக்காரங்கிட்ட கடன் வாங்கினு கிடைத்த பணத்தைணல்லாம் கொட்டித்தான் பண்ணைணை ஆரம்பித்தோம்.

கேராளாவில் வாங்கிட்டு வந்த தலைச்சேரிக் குட்டி ஒவ்வொண்னும் நான்காயிரம் ரூபாய். அதை வாங்கிட்டு வந்து இரண்டு மூன்று மாதம் கழித்து, மகாராஷ்டிரா மாநிலம் புனே பக்கத்தில் இருக்கிற 'நிமிக்கர்' ஆட்டுப்பண்ணயில் (மத்திய வேளாண் துறை அமைச்சர் சரத் பவாருக்குச் சொந்தமானது) இருந்து, ஒரு குட்டி இருபத்தைந்தாயிரம் ரூபாய்னு 15 "போயர்" ரகக் குட்டிகளை வாங்கினேன். அதன் பிறகு ராஜஸ்தானிலிருந்து 'சிரோஹி' ரகக் குட்டிகள் கொஞ்சத்தை வரவழைத்தோம்.

குட்டிகள் வளர்த்துப் பெருக்கி, நான்காவது வருடத்திலிருந்து விற்பனையை ஆரம்பித்தோம். பண்ணை ஆரம்பித்த ஐந்தரை வருடத்திற்குள்ளேயே வாங்கின் கடனில் முக்கால் பங்கு அடைச்சாச்சு. நாங்களே இந்தளவுக்கு எதிர்பார்க்கவில்லை. கண்ணும் கருத்துமாக கவனித்தால்.. கண்டிப்பாக வெற்றியை அடைய முடியும் என்பதை அனுபவத்திலேயே புரிந்துக்கொண்டோம் என்றார் மணி.

செலவில்லாமல் தீவனம்!

'80 அடி நீளம். 20 அடி அகலத்தில் நலு கொட்டில் இருக்கு. 64 அடி நீளம் 20 அடி அகலத்தில் மூன்ற கொட்டில் இருக்கு. எல்லாக் கொட்டிலுமே தரையை விட்டு நாலடி உயரத்தில்தான் அமைத்திருக்கோம். கொட்டிலோட தரைத்தளத்தை இடைவெளி விட்டு விட்ட அமைத்திருப்பதால், கழிவுகள் எல்லாமே தரையில் வந்து விழுந்துவிடும். அப்படியே ஆடுகள் இறங்கி நடப்பதற்கு கொஞ்சம் இடம் விட்ட அதற்கு வேலி போட்டிருக்கோம். கொட்டிலுக்குள் வெளியில் தீவனம் வைக்கிறதுக்கான ஏற்பாடுகள் இருக்கு.

பத்து ஏக்கர் நிலத்திலும் தென்னை நட்டுட்டு, அதற்கு இடையில் ஊடுபயிராக கோ – 4, வேலிமசால். கிளரிசீடியா, சூபாபுல், கோ.எஃப்.எஸ்.. இப்படி எதற்கும் ரசாயன உரங்களை போடுவதே கிடையாது. ஆட்டுப்புழுக்கை மட்டும்தான்! அதனால் தீவனப் பயிரெல்லாம் நல்லா வளர்கிறது. செலவும் குறைந்துவிட்டது.

இப்போ.. தலைச்சேரி ரகத்தில் 350, சிரோஹியில் 100, போயரில் 20 உருப்படி, மூன்றும் கலந்த கலப்பினத்தில் 150 என்று மொத்தம் 620 ஆடுகள் இருக்கு என்று மணி நிறுத்த, தொடர்ந்து பராமரிப்பு பற்றி சொல்ல ஆரம்பித்தார், அவருடைய மனைவி ருக்மணி.

ஒரு ஆட்டுக்கு ஒரு நாளைக்கு ஐந்து கிலோ பசுந்தீவனம் கொடுக்கிறோம். பசுந்தீவனத்தை இரண்டாகப் பிரித்து காலையில் எட்டு மணிக்குள் ஒரு தடவையும், சாயங்காலம் நான்கு மணிக்கு மேல் ஒரு தடவையும் கொடுப்போம். மதிய நேரத்தில் ஒரு ஆட்டுக்கு கால் கிலோ என்ற கணக்கில் புழுக்கைத் தீவனம் (அடர் தீவனம்) கொடுப்போம். பருத்திக் கொட்டை, அரிசத் தவிடு, உப்பு, மினரல் பவுடர்.. எல்லாவற்றையும் அரைத்து இநதத் தீவனத்தை நாங்களே தயாரிக்கிறோம். இதற்கு தனி மெஷின் இருக்கு.

எல்லா வகையான தீவனப் புல்லையும் கலவையா அறுத்துக்கிட்டு வந்து, கட்டிங் மெஷினில் கொடுத்துப் பொடிப்பொடியாக நறுக்கித்தான் கொடுக்கிறோம். அதனால் தீவனத்தை வீணாக்காமல் முழுவதுமாக ஆடுகள் சாப்பிட்டுவிடும். ரசாயன உரம் போடாமல் தீவனத்தை விளைவிப்பதால் விரும்பி சாப்பிடும். கொட்டில்ல குடிப்பதற்காக எப்பவும் தண்ணீர் வைத்திடுபோம். பசுந்தீவனம் அறுத்திட்டு வந்து நறுக்கிறது, தீவனம் தயாரிக்கிறது, பராமரிப்பு எல்லாவற்றிற்க்கும் சேர்த்து மொத்தம் எட்டு பேர் (4 ஆண்கள், 4 பெண்கள்) தினசரி வேலைக்கு வர்றாங்க.

எல்லா ரக ஆடுகளிலேயும் இன விருத்திக்காகத் தனியா கிடாக்களை வைத்திருக்கிறோம். இருபது பெட்டைக்க ஒரு கிடாங்கிற கணக்கில் பராமரிக்கிறோம். வருடத்திற்கு இரண்டு தடவை தடுப்பூசி போட்டுடுவோம். தவணை தப்பாமல் குடற்புழு நீக்கம் செய்திடுவோம் என்றார் ருக்மணி.

இரண்டு வருடத்தில் மூன்று ஈத்து

மூன்று ரக ஆடுகளுமே இரண்டு வருடத்தில் மூன்று ஈத்து எடுக்கும். தலைச்சேரி ரகத்தில் ஒரு ஈத்துக்கு இரண்டு குட்டிகள் கிடைக்கும். குட்டிகள் நான்கு மாதத்தில் 20 கிலோ எடை வந்து விடும். ஒரு குட்டி, ஐந்தாயிரம் ரூபாய் வரைக்கம் விலை போகும்.

போயர் ரகத்திலையும் ஈத்துக்கு இரண்டு குட்டி கிடைக்கும். நான்கு மாதத்தில் 25 கிலோ எடை வரைக்கும் வந்து விடும். உயிர் எடைக்கு கிலோ 750 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரை விற்பனையாகிறது. எப்படிப் பார்த்தாலும் நான்கு மாதக்குட்டி 20,000 ரூபாய் வரைக்கும் விற்பனையாகிறது. பெரும்பாலும் வளப்பிற்காகத்தான் இந்த ஆடுகளை வாங்கிட்டுப் போறாங்க.

சிரோஹி ரகத்தில் ஈத்துக்கு ஒரு குட்டித்தான் கிடைக்கும். இதுவும் நான்கு மாத்தில் 20 கிலோ வரை வந்து விடும். உயிர் எடைக்கு கிலோ 200 ரூபாயில் இருந்து 300 ருபாய் வரை விற்பனையாகிறது.

எங்களோட தேவைக்குப் போக மிச்சம் இருக்கும் ஆட்டுக் கழிவுகளை ஒரு டன் 2,500 ரூபாய்னு உரத்திற்கு விற்பனை செய்துகிட்டிருக்கோம். மாதத்திற்கு பத்து டன் வரைக்கும் விற்பனையாகிறது.

முதலீடு ஐம்பது லட்சம்.. வருடத்திற்கு லாபம் முப்பது லட்சம்!

ஆடுகளுக்கு அமைச்சப் பெரியக் கொட்டில் ஒவ்வொன்றும் ஐந்து லட்ச ரூபாய் வரைக்கும் செலவானது. சின்னக் கொட்டில்களுக்கு மூன்றரை லட்ச ரூபாய் வரைக்கும் செலவானது. அந்த வகையில் கொட்டில்களுக்கே முப்பது லட்சம் வரை செலவாகிவிட்டது. தீவனம் தயாரிக்கிற மெஷின் பத்து லட்ச ரூபாய். இது போக ஆடுகளுக்கான முதலீடு, நடைமுறைச் செலவுனு பண்ணையோட மொத்த முதலீடு.. ஐம்பது லட்சத்தை தாண்டிவிட்டது.

ஆரம்ப காலங்களில் ஆட்டுப்புழுக்கை விற்பது மூலமாக கிடைக்கிற பணம் மட்டும் தான் வருமானமே. மூன்று வருடத்திற்க்கு பிறகுதான் ஆடுகள் மூலமாக வருமானம் . இப்போ வரைக்கும் இரண்டாயிரம் குட்டிகளை விற்பனை செய்திருக்கிறோம். சராசரியாக குட்டி நான்காயிரம் ரூபாய்க்கு விற்பனையாகிறது. அதன் மூலமாக எண்பது லட்ச ரூபாய் வருமானம் கிடைத்தது. அது போக கழிவுகள் விற்ற பணம் எல்லாமே இதுவரைக்கும் ஆன செலவுகளுக்கு சரியாப் போய்விட்டது. இப்போ கையில் இருக்கிற 620 ஆடுகள் தான். இந்த ஐந்தரை வருடத்தில் கிடைத்த லாபம். இனிமே தான் இதிலிருந்து நிரந்தர வருமானத்தைப் பார்க்க போகிறோம். எப்படியும் வருடத்திற்கு குறைந்தது முப்பது லட்ச ரூபாய் அளவுக்கு லாபம் கிடைக்கும்னு எதிர்ப்பார்க்கிறோம். இது இறங்குமுகம் இல்லாத தொழில் என்பதால் கண்டிப்பாக இதை விடக் கூடுதலாகத்தான் லாபம் கிடைக்கும்.

தனித்தனியா ரகங்களைக் கலக்காமல் பராமரிக்கிறதால் ஆடுகளோட விந்தணுக்களை எடுத்து விற்பனை பண்ற யோசனையும் இருக்கிறது. அதற்கான வேலைகளும் நடந்துகிட்டிருக்கு. அதற்கான ஒப்பந்தம் கிடைத்து என்றால் இன்னமும் கூடுதலாக லாபம் கிடைக்கும் என்றார் மணி.

**தொடர்புக்கு :** மணி

அலைபேசி : 94875-92353.